## லுணுகம்வெஹெர பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லுணுகம்வெஹெர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கருதுகோள் அடிப்படையிலான அபிவிருத்தி மானியங்களின் கீ பெரலிஹல ஜனசவிகம மத்திய வீதியினை அபிவிருத்தி செய்வதற்காக 2016 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 520,640 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அதற்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 146,030 தொகையான மடிகணனி மற்றும் 07 இறாக்கைகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்துடன், வெகுமதியாக கிடைத்த வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி ரூபா 31,418 இனால் குறைத்து மூலதனமாக்கப்பபட்டிருந்தது.

(இ) நிர்மாண பணியொன்றிற்காக 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 293,563 தொகைக்காக மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டினுள் நிர்மாண பணியொன்றிற்காக பெறப்பட்டிருந்த மற்றும் செலுத்தப்பட்டிருந்த ரூபா 27,706 தொகைக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோருக்கான ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 82,200 தொகையான நிலுவை அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு 2015 சனவரி மாதம் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் கடமைக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 21,238 தொகையான பணம் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாணம் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் - 2012 இன் கீழ் வீதியொன்றினை நிர்மாணிப்பதற்காக பெற வேண்டியதாக இருந்த ரூபா 8,400 தொகையான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் வாழ்கைப்படி கொடுப்பனவாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 6,500 தொகையான பணம் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் ரூபா 1,358 தொகையான கையிருப்பிலுள்ள காசு மற்றும் ஏனைய நிலுவை வருமானமான ரூபா 2,327 தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 (1) பிரிவு | வீதவரியும் வரியினை மதிப்பீடு செய்து அறவிடல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக்கோவை | |
| | i. விதி 185 | சபையின் தொழிற்சாலைக் கணக்கின் ரூபா 2,718,475 தொகையான மாதாந்த பொது நிதி மீதியினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. விதி 193 | பாதிடப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளுடன் இணக்கம் செய்து ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவின விடயங்களின் கீழான மிகையொன்றோ அல்லது பற்றாக்குறையொன்றோ தொடர்பில் விடயங்களை விளக்கும் கூற்றொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாணம் 571 (3) | 2005 மற்றும் 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 23,000 கூட்டுத்தொகையான 46 வைப்பு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கை | 2016 ஆம் ஆண்டின் போது சபைக்கு சொந்தமான பத்து வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (உ) 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிச் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் 4.3 (ஆ) மற்றும் (உ) பிரிவு | சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள இடமாற்றல் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும், சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,741 தொகையான கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,017,675 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 61,925 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 955,751 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 95 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சபையின் சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் மீண்டெழும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும், மீளாய்வாண்டின் போது அந்த பெறுமதி சுயமாக உருவாகும் வருமானத்தை விட மூன்று மடங்கினை விஞ்சியுள்ளதாகவும், வருமானத்தின் உதவி கிடைத்திருக்காவிடின் சபையின் வருமானத்தில் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்ய முடியாது என்பதை காட்டியது. செலவினத்தை கட்டுப்படுத்தி குறைந்த மட்டத்தில் பேணுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டியது.

### 2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் 1 : 1.27 ஆக இருந்ததுடன், அதில் கடந்த வருடத்தை விட வீழச்சியொன்றினைக் காட்டியது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டினுள் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 50.85 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 41.43 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 77 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8.96 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 8.38 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 94 சதவீதமாக இருந்தது.

### 2.4.2 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான 19 கடைகளிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 64,810 தொகையான வாடகை மற்றும் ரூபா 6,400 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதாக இருந்ததுடன், அந்த நிலுவைத் தொகையினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 251,845 மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 865,000 தொகை பெறவேண்டியதாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமின்மைகள்

### 3.1.1 வீதி விளக்குகளின் பராமரிப்பு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி விளக்குகளை பராமரித்தல் தொடர்பில் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிராமையால், சபையினால் எந்தளவான வீதி விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன என்பதை பரிசீலிக்க முடியாதிருந்தது.

(ஆ) 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க மின்சார மற்றும் வலுச்சக்தி அமைச்சின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் தாபிக்கப்பட்டுள்ளன. வீதி விளக்குகள் தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கு விண்ணப்பித்து சட்டரீதியானதாக மாற்றுதல் மூலம் உரிய செலவினங்களை மீளளிப்பு செய்யக்கூடியதாக இருந்த போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குரிய 06 பதவிகளின் ஒன்பது பேருக்கான வெற்றிடங்கள் மற்றும் 03 பதவிகளுக்குரிய மூன்று பேரின் மிகையொன்று நிலவியது. மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதனைப் போன்று வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 2012 பெப்ரவரி 06 ஆந் திகதி கிடைத்திருந்த கொன்கிறீட் கலக்கும் இயந்திரம் அந்திகதியிலிருந்து பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

(i) பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து 1993 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் சபைக்கு கிடைத்திருந்த 12 வாகனங்களின் உரித்து 2017 யூலை 30 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான 14 மயானங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

திண்மக்கழிவு மீள் சுழற்சி செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

24 செலவின விடயங்களுக்கான பாதிடப்பட்ட ரூபா 817,815 தொகையான மொத்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், 05 உருமான விடயங்களின் பாதகமான விலகல்களின் கூட்டுத்தொகை ரூபா 21,883,022 ஆகும். அந்த பெறுமதிகள் 24 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு